முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

# மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
# Provincial Department of Education Northern Province
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2021

கிறிஸ்தவம் – 15
Christianity – 15

3 மணித்தியாலம்
Three Hours

கவனிக்க:
* எல்லா வினாக்களுக்கும் விடை தருக
* 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.

## பகுதி 1

1. "ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர்விடும்" இவ்வாறு கூறிய இறைவாக்கினர்
   1) எசாயா 2) மீக்கா 3) மலாக்கி 4) எரேமியா
2. இயேசுவிற்கு முன்னோடியாக அனுப்பப்பட்டவர்
   1) செக்கரியா 2) யோசேப்பு 3) திருமுழுக்கு யோவான் 4) பேதுரு
3) " உலகில் நீதியை நிலைநாட்டும் வரை அவர் சோர்வடையார்" என யாரைக் குறித்து எசாயா இறைவாக்கினர் கூறியுள்ளார்
   1) திருமுழுக்கு யோவானை 2) இயேசுவை
   3) செக்கரியாவை 4) சிமியோனை
4) A: தாழ்மையுள்ளம் கொண்டவரும், இறைகட்டளைப்படி நடந்த யூதமதக் குருவும் ஆவார்.
   B: இறைகட்டளைக்குக் கீழ்ப்படிந்து வானதூதர் அறிவித்ததை ஏற்றுக் கொண்டார்.
   மேற்கூறப்பட்ட கூற்றுக்களோடு தொடர்புடையவர்கள்
   1) யோசேப்பு, மரியாள் 2) மரியாள், எலிசபேத
   3) செக்கரியா, மரியாள் 4) செக்கரியா, யோசேப்பு
5. மத்தேயு நற்செய்தியில் இயேசுவின் பிறப்புக் குறித்துக் கூறப்பட்ட அடையாளங்கள்
   1) இடையர்கள் வருகை, ஞானிகள் வருகை 2) ஒளிரும் விண்மீன், ஞானிகளின் வருகை
   3) வானதூதரின் அறிவித்தல், இடையர்களின் வருகை 4) மாட்டுத்தொழுவம், இடையர்கள்
6. மேய்ப்பரின் வாழ்த்துதலைக் கேட்ட மரியா
   1) ஆச்சரியத்தில் மூழ்கினார் 2) அவற்றைப் பற்றிச் சிந்தித்தார்
   3) கடவுளுக்கு துதி செலுத்தினார் 4) தனக்குள் மகிழ்ந்தாள்
7. திருமுழுக்கு யோவானைப் பற்றி இறைவாக்குரைத்தவர்கள்
   1) மலாக்கி, எசாயா 2) மீக்கா, எசாயா
   3) மலாக்கி, மீக்கா 4) மீக்கா, எரேமியா
8. கடவுள் ஆபிரகாமுடனும் அவரின் வழிமரபினருடனும் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அடையாளம்
   1) பெயரிடுதல் 2) அர்ப்பணிப்பு
   3) விருத்தசேதனம் 4) பாஸ்கா
9. அர்ப்பணிப்பு விழாவின் போது பிள்ளைக்குப் பதிலாக மீட்புத் தொகையாக எதனைச் செலுத்துவர்
   1) செக்கேல் நிறைப்படி ஐந்து வெள்ளிக்காசு 2) செக்கேல் நிறைப்படி பத்து வெள்ளிக்காசு
   3) ஆட்டுக்குட்டிகள் இரண்டு 4) புறாக்குஞ்சுகள் இரண்டு
10. பாலகன் இயேசுவை ஜெருசலேமில் மெசியாவாக இனங்கண்டு கொண்டவர்கள்
   1) மரியாள், யோசேப்பு 2) அன்னா, சிமியோன்
   3) செக்கரியா, எலிசபேத் 4) செக்கரியா, மரியாள்
11. கிறிஸ்டொஸ் என்ற கிரேக்கச் சொல்லின் பொருள்
   1) அனுப்பப்பட்டவர் 2) அழைக்கப்பட்டவர்
   3) அருட்பொழிவு பெற்றவர் 4) பிரிக்கப்பட்டவர்
12. "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள் நான், என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா" என்று இயேசு தாய்க்குக் கூறியதிலிருந்து வெளிப்படும் கருத்து அல்லாதது
   1) இயேசு கடவுளைத் தனது பிதாவாக ஏற்றுக் கொண்டார்
   2) இயேசு தன்னைப் பற்றிச் சரிவர அறிந்திருந்தார்
   3) கடவுளை வழிபடுவதற்கு கோவிலில் தரித்திருக்க வேண்டும்
   4) இயேசு தன்னைக் கடவுள் என வெளிப்படுத்தினார்



kalvi.lk

13. ''ஆபிரகாம் எங்களுக்குத் தந்தை என உள்ளத்தில் சொல்லத் தொடங்காதீர்கள்'' என திருமுழுக்கு யோவான் யாருக்குக் கூறினார்.

1) படைவீரருக்கு
2) யூதமதத்தவர்களுக்கு
3) வரிதண்டுவோருக்கு
4) பொதுமக்களுக்கு

14. திருமுழுக்கு யோவானின் செய்தி இன்றைய சமூகத்திற்கு தொடர்புடையதாக அமைவதற்கான காரணம்

1)இயேசுவிற்கு முன்னோடியாக அமைந்த பணியைப் புரிந்து கொள்வதற்கு
2) உறவினர், நண்பர்களுடன் ஐக்கிய விருந்தில் பங்குபெறுவதற்கு
3) திருமுழுக்கு என்னும் ஞானஸ்ஞானத்தின் முக்கியத்துவத்தை விளக்குவதற்கு
4) சமுதாயத்தில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்துவற்கு

15. இயேசு நாசரேத்து தொழுகைக் கூடத்தில் வாசித்த பகுதியை நாசரேத்து அறிக்கை என்பர். அப்பகுதி

1) ஏசாயா 61: 1 – 2
2) ஏசாயா 62: 1 – 2
3) ஏசாயா 63: 4– 5
4) ஏசாயா 65: 1 – 2

16. இயேசுவின் சீடத்துவத்திற்கு அழைக்கப்படும் ஒருவருக்கு இருக்க வேண்டிய முக்கிய குணாதிசயம்

1) பொறுமை
2) தைரியம்
3) தாழ்மை
4) தியாக மனப்பான்மை

17. ''ஆழத்திற்குத் தள்ளிக் கொண்டு போய் மீன் பிடிக்க, உங்கள் வலைகளைப் போடுங்கள்'' என இயேசு யாருக்குக் கூறினார்?

1) யோவானுக்கு
2) யாக்கோபுவுக்கு
3) அந்திரேயாவிற்கு
4) பேதுருவிற்கு

18.. இயேசுவின் உயிர்ப்பை முதலில் சந்தேகித்து பின் உறுதி செய்தவர்

1) தோமா
2) மத்தேயு
3) பிலிப்பு
4) பேதுரு

19. இறைவனின் குடும்பத்தில் நெருங்கிய அங்கத்தவர்களாவதற்கு நாம் செய்ய வேண்டியது

1) தினமும் ஜெபித்தல்
2) இறைவனின் விருப்பை அறிந்து அதைச் செயற்படுத்துதல்
3) தினமும் திருவிவிலியத்தைச் வாசித்தல்
4) ஓய்வு நாட்களில் ஆலயத்திற்குச் செல்லுதல்

20. ஒரு வார்த்தையேனும் கூறாமலே தன் விசுவாசத்தினால் சுகம் பெற்றவர்

1) பேதுருவின் மாமி
2) முடக்குவாதக்காரன்
3) இரத்தப்போக்குடைய பெண்
4) நயீர் ஊர் விதவை

21) யூத நீதிச் சட்டங்களை எழுதுவதையும் கற்பிப்பதையும் பாதுகாத்து வந்தவர்கள்

1) பரிசேயர்கள்
2) சதுசேயர்
3) போர்வீரர்
4) மறைநூல் அறிஞர்கள்

22) எழுபது சீடர்களுக்குக் கொடுக்கப்பட்ட அறிவுரை அல்லாதது

1) இருவர் இருவராகச் செல்லுதல்
2) ஏற்றுக் கொள்வோருடன் தங்குதல்
3) எளிமையான வாழ்வு
4) பணப்பை, மிதியடி வேறுபை எடுத்துச் செல்லக்கூடாது

23. நல்ல பங்கைத் தேர்ந்து கொண்ட பெண்

1) மரியாள்
2) மார்த்தாள்
3) பாவியான பெண்
4) சமாரியப்பெண்

24. சதுசேயரைப் பற்றிக் குறிப்பிடப்படாத விடயம்

1) சாதோக் வழிமரபில் தோற்றம் பெற்றவர்கள்
2) தம்மை நீதிமான்கள் எனக் கருதிப் பெருமை கொண்டவர்கள்
3) ஜெருசலேம் ஆலயம் இவர்களின் மையமாக இருந்தது.
4) தலைமைக்குருக்களும் மூப்பர்களும் இவர்களின் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர்

25. வெற்றி ஆர்ப்பரிப்போடு இயேசு, ஜெருசலேமிற்குள் நுழைவதற்கு தெரிவுசெய்யப்பட்ட மிருகம்

1) கழுதைக்குட்டி
2) குதிரை
3) ஒட்டகம்
4) யானை

26. இயேசுவைக் கைது செய்து முதலில் எங்கு அழைத்துச் சென்றனர்?

1) பொதுமக்களின் முன்பாக
2) தலைமைக்குருவின் மன்றத்திற்கு
3) ஆளுநராகிய பிலாத்துவிடம்
4) ஏரோதுவின் அரண்மனைக்கு

27. நபி என்ற சொல்லின் பொருள்

1) ஆசிரியர்
2) குரு
3) போதகர்
4) அரசர்

28. மரணத்திற்கு ஏதுவான குற்றம் எதுவும் இயேசுவில் காணப்படவில்லை எனக் கூறியவர்

1) பரிசேயர்
2) ஏரோது
3) மறைநூல் அறிஞர்
4) பிலாத்து



kalvi.lk

29. இயேசுவின் பணியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றவர்
1) யோவான் 2) யாக்கோபு
3) பேதுரு 4) மத்தேயு

30. இயேசு உயிர்துறக்கும் போது கூறியது
1) பிதாவே உமது கரங்களில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்
2) தாகமாயிருக்கிறேன்
3) எல்லாம் முடிந்தது
4) என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்

31. இயேசுவின் திருமுழுக்குப் பற்றிக் கூறப்படாத நற்செய்தி நூல்
1) மத்தேயு 2) யோவான்
3) மாற்கு 4) லூக்கா

32. நீர் கடவுளின் மெசியா என இயேசுவை அறிக்கையிட்டவர்
1) யோவான் 2) யாக்கோபு 3) தோமா 4) பேதுரு

33. இயேசுவின் இரக்கத்தினால் முற்றிலும் புதியவாழ்வை மேற்கொள்வதற்குத் தூண்டப்பட்டவர்
1) நிக்கதேமு 2) லேவி 3) சகேயு 4) நூற்றுவர்தலைவன்

34. திருமுழுக்கினால் கிறிஸ்தவர்களாகிய நாம்
1) தூய்மையடைகிறோம் 2) மனந்திரும்புகிறோம்
3) நித்திய வாழ்வைப் பெறுகின்றோம் 4) ஆவியானவரின் கிருபைக்குப் பாத்திரமாகின்றோம்

35. இயேசுவைப் போன்றே இன்றைய கிறிஸ்தவரும் எதிர்நோக்கும் முக்கிய சோதனை
1) மிக உயர்ந்த தொழிலைத் தெரிவு செய்தல்
2) மிகச் சிறப்பான செயல்முறையைத் தெரிவு செய்தல்
3) கடவுள் தரும் வல்லமையை உபயோகித்தல்
4) தீமையை எதிர்க்க இயலாமை

36. மனந்திரும்புதல் என்பதன் மூலம் கிறிஸ்தவர்கள் கருதுவது
1) தூய ஆவியானவரின் கிருபையின் உதவியுடன் புதிய வாழ்விற்குள் பிரவேசித்தல்
2) ஒரு சமயத்தை விட்டு இன்னொரு சமயத்தில் சேருதல்
3) கிறிஸ்தவப் பெறுமதிகளைப் பற்றி தியானித்தல்
4) திருமுழுக்குப் பெற்று திருச்சபையின் அங்கத்துவம் பெறல்

37. ஓய்வுநாளும் மானிடமகனுக்கு கட்டுப்பட்டதே என்று இயேசு உணர்த்தியதன் அழுத்தம்
A: பழங்காலப் பாரம்பரியங்களைக் கடைப்பிடிப்பது அவசியமற்றது
B: சட்டங்களை விட மனிதேவைகள் முக்கியமானவை
C: அன்றாட வாழவில் சட்டங்களைக் கடைப்பிடிப்பது முக்கியமல்ல
D: மனிதருக்காகவே இயேசு ஓய்வுநாளைப் படைத்தார்
இவற்றுள் சரியான விடைகள் உள்ளடக்கப்படுவது
1) AB 2) BC 3) BD 4) CD

38. கிறிஸ்தவர்கள் தமது வீட்டிற்கு வரும் அந்நியரை வரவேற்க வேண்டியது
1) நல்ல வார்த்தைகளினால் 2) சிறப்பு விருந்தோம்பலுடன்
3) உரிய மரியாதையுடன் 4) சகோதர அன்புடன்

39. இயேசுவின் போதனையின் படி, நாம் அவரின் சீடர்கள் என அனைத்து மக்களும் புரிந்து கொள்ளும் சிறந்தவழி
1) ஒருவரையொருவர் மதித்தல் 2) ஒருவருக்கொருவர் உதவி செய்தல்
3) ஒருவரையொருவர் நேசித்தல் 4) ஒருவரையொருவர் நம்புதல்

40. நீங்கள் ஏன் கலங்குகின்றீர்கள் ஏன் இவ்வாறு உங்கள் உள்ளத்தில் ஐயம் கொள்கின்றீர்கள் ஆண்டவர் இயேசு இவ்வார்த்தைகளைக் கூறியது
1) பெண்கள் சிலருக்கு 2) எம்மாவுஸ் சென்ற இரண்டு சீடர்களுக்கு
3) சிமியோன் பேதுருவிற்கு 4) பதினொரு சீடர்களுக்கு

**(புள்ளிகள்40 x1=40)**



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page